Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 384 /2023

Deposition of witness for Prosecution P.W.3 Date : 15.05.2024

| | | | |
|---|---|---|---|
| Name : | யசின் | Village : | ஸ்ரீரங்கப்பட்டினம் |
| Father's Name : | யூசுப் | Taluk : | மாண்டியா, கர்நாடகா |
| Age : | 65 | Religion : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of May 2024 **(Accused 1 - 4 Present)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.

நான் தற்போது ஸ்ரீரங்கப்பட்டினம், மாண்டியா வட்டத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1-னிடம் நான் டிரைவராக வேலைபார்த்த நிலையில் அவரை எனக்கு தெரியும். அ.சா.1 Scrap தொடர்பான வேலை செய்து வருகிறார். இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் நான்கு பெயரையும் எனக்கு தெரியும். எதிரிகளும் அ.சா.1ம் தொழில் முறையில் பரிவர்த்தனை செய்துகொண்ட விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வேண்டியதின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் கோவில்பாளையம் வந்திருந்தேனா என்றால் பழைய சாமான்கள் வாங்க அ.சா.1 வந்தபோது அவருக்கு டிரைவராக வந்திருந்தேன். அ.சா.1-ம் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றால் ஆமாம். இதற்கு முன்னர் எதிரிகளுக்கும் அ.சா.1-ற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எதிரிகளுக்கும் அ.சா.1 ற்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பிரச்சனை இருந்து என்றும், அ.சா.1 எதிரிகளுக்கு பணம் கொடுக்கவேண்டியிருந்ததால் நீங்கள் மற்றும் அ.சா.1 மற்றும் அவரது மகன் கோவையில் உள்ள கோவில்பாளையம் பகுதிக்கு காரில் வந்தபோது இந்த வழக்கின் எதிரிகள் தங்களுக்கு சொந்தமான குண்டாய் காரில் வந்து நீங்கள் சென்ற காரை வழிமறித்து கொலை மிரட்டல் விடுத்து உங்களை கடத்தி சென்றுவிட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், இப்போது அ.சா.1-ம் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டகாரணத்தினால் அ.சா.1க்கு ஆதரவாக இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.)

Take down by me/before me in

open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.